


அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுத் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம் நத்தம், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, விருதுநகர் மாவட்டம் திருச்சுழி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். நத்தம் ஆர்.சி.சிறுமலர் மேல்நிலைப் பள்ளியிலும், மானாமதுரை கீழடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியிலும், திருச்சுழி காரியாபட்டி கிளை நூலகத்திலும் ஒரே நாளில் 05.08.2024 அன்று தொடர் ஆய்வினை மேற்கொண்டார். பள்ளிகள் மற்றும் நூலகத்தின் மேம்பாட்டிற்குத் தேவையான கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

### முதலமைச்சரின் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை 2030க்குள் எய்திட - தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது!

# ‘சிப்காட்’ இல்லாத மாவட்டங்களில் புதிதாக ‘சிப்காட்’ வளாகம் அமைக்க நடவடிக்கை!

### ‘சிப்காட்’ திட்ட அலுவலர்கள் - பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா உறுதி!

சென்னை, ஆக. 7-

**‘சிப்காட்’ தொழிற் பூங்காங்களின் திட்ட அலுவலர்கள், பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் பேசிய தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, “முதலமைச்சரின் 1 டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை 2030க்குள் எய்திட - தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது” என்றும் - “தமிழ்நாட்டில் ‘சிப்காட்’ வளாகங்கள் இல்லாத மாவட்டங்களில் புதிதாக ‘சிப்காட்’ வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்றும் குறிப்பிட்டார்.**

அதன் விபரம் வருமாறு:முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தொழில் துறையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கின்ற வகையில் தமிழ்நாடு உள்ளிட்ட பிற மாநிலங்கள் மற்றும் உலக அளவிலான தொழில் முதலீட்டாளர் கள், தொழில் நிறுவனங் கள் தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கிட புதிய முதலீட்டு ஒப்பந்தங்கள் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில், தமிழ்நாட்டில் புதிய சிப்காட் தொழில் பூங்காக்கள் அமைத்தல், தொழில் முதலீடுகள், நிலம் கையகப்படுத்துதல் பணி முன்னேற்றம் மற்றும் தொழில் பூங்காக்களில் உட்கட்டமைப்புகள் மேம்படுத்துதல் தொடர்பாக, அனைத்து சிப்காட் தொழிற் பூங்காக்களின் திட்ட அலுவலர்கள், தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் (நில எடுப்பு) மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று (05.08.2024) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு திட்டமான ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியினை 2030-க்குள் எய்திடும் வகையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சிறப்பாக செயலாற்றி வருகிறது.

தொழில் வளர்ச்சியே ஒரு நாட்டின் வளர்ச்சியாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் தொழில் தொடங்க வேண்டும் என்றால் தமிழ்நாடுதான் சிறந்தது என்பதை அடையாளப்படுத்த வேண்டும். தமிழ்நாடு தொழில் தொடங்குவதற்கான முன்னோடி மாநிலமாக திகழ வேண்டும் என முதலமைச்சர் இந்தத் துறையை தனது கண்காணிப்பில் வைத்துள்ளார். இதற்காக பல்வேறு திட்டங்களையும் அறிவித்துச் செயல்படுத்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான தகுந்த இடங்களை ஆய்வு செய்ய வேண்டும். தமிழ்நாட்டை தொழில் தொடங்க சிறந்த மாநிலமாக அடையாளப்படுத்துவது அலுவலர்களின் கடமை. ‘சிப்காட்’ வளாகங்கள் இல்லாத மாவட்டங்களில் புதிதாக ‘சிப்காட்’ அமைப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மற்றும் சட்டமன்ற மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திடவும், நடைபெறவுள்ள பணிகளுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு சிறப்பாக முடித்து விரைந்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரவும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாகப் பணிபுரிய வேண்டும்.

தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் வசதிக்காக சிப்காட் BIZ BUDDY HELPLINE எண் வசதி 9894322233 ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தொழில் முதலீட்டாளர் கள் மற்றும் தொழில் முனைவோர் வேண்டுகோளை ஏற்று மாதந்தோறும் முதல் திங்கள் கிழமை நடத்தப்பட்டு வந்த BIZ BUDDY - கூட்டம் இனி வரும் காலங்களில் மாதந்தோறும் இரண்டாவது வெள்ளிக்கிழமை நடத்தப்படும் - என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சிப்காட் மேலாண்மை இயக்குநர் மரு. கி.செந்தில் ராஜ், சிப்காட் செயல் இயக்குநர் திருமதி டி.சிநேகா, சிப்காட் திட்ட அலுவலர்கள், தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் (நில எடுப்பு) மற்றும் பொறியாளர்கள் கலந்துக்கொண்டனர்.

# விழுப்புரம் தெற்கு மாவட்ட அனைத்து அணிகளின் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழக பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை

விழுப்புரம், ஆக. 7-

விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட தி.மு.க.வின் சார்பு அணிகளின் ஆலோசனைக் கூட்டம் கழக துணைப் பொதுச்செயலாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களின் ஆலோசனைப்படி மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்களின் தலைமையில் இன்று (07.08.2024 -புதன்கிழமை) காலை 11 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.



மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன் , அன்னியூர் அ.சிவா , மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என் முருகன் , தயா.இளந்திரையன் , இரா. கற்பகம் , மாநில மகளிர் பிரச்சாரக் குழுச் செயலாளர் தேன்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்ட சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி!

### மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல் ஆக.7-

நாமக்கல் கிழககு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என். இராஜேஸ் குமார் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளினையொட்டி நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பில் இன்று (07.08.2024 -புதன்கிழமை) காலை 8.00 மணிக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமையில் பேரறிஞர் அண்ணா சிலை அருகில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தப்பட வுள்ளது

மேலும் நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றிய நகர பேரூர் - கிளை, வார்டு வாரியாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் படத்திற்கு அஞ்சலி செலுத்தி, கழக மூத்த முன்னோடிகளுக்கு வேஷ்டி சேலை வழங்கியும், ஏழை எளியோர்களுக்கு உணவு வழங்கியும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை அனுசரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



இந்நிகழ்ச்சியில். வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள், நகர் மன்ற தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வார்டு கழக செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என அனவைரும் அவர் அவர்களுக்கு உட்பட்ட பகுதிகளில் பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




திண்டிவனத்தில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன் திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மகளிர் அணி அமைப்பாளர் திலகவதிஉள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6வது ஆண்டு நினைவு நாள்

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# இன்று (ஆகஸ்ட் 7) - அமைதிப் பேரணி!

### மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு - மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக - திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழ்நாடு வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவுநாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் “அமைதிப் பேரணி”, ஆகஸ்ட் - 7, புதன்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

இதில், தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் - முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**நாள்: 02.08.2024.** **சென்னை மாவட்ட தி.மு.க.,**

### ஈரோடு வடக்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

### மாவட்ட கழகச் செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை !

ஈரோடு, ஆக.7-

ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் என். நல்லசிவம் அறிக்கை வருமாறு:

ஈரோடு வடக்கு மாவட்டத்தில் ஜனநாயகம், சமூக நீதி, சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை உள்ளிட்ட அனைத்து முற்போக்கு இலட்சியங்களுக்காகவும், தனது வாழ்நாள் முழுவதும் வாதாடி, போராடி ஆட்சியில் இருந்தபோது உன்னத நோக்கங்களை நிலை நாட்டிய நமது அருமைத்தலைவர், தமிழனத்தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளையொட்டி 07.08.2024 புதன்கிழமை சரியாக காலை 8 மணிக்கு கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம் பிரிவில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழகச் செயலாளர் என்.நல்லசிவம் மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்துகிறார். அதுசமயம் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைக்கழகம், நகராட்சி, பேரூராட்சி, வார்டு கழகங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்துவோம்.



எனவே மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், கழகத் தோழர்கள், தொ.மு.ச நிர்வாகிகள் அனைவரும் இந்த நினைவு நாள் நிகழ்ச்சியில் அந்தந்த பகுதிகளில் கலந்து கொள்ள வேண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் நிகழ்ச்சியை நடத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவுநாள்

# திருச்சி மத்திய-வடக்கு மாவட்டம் முழுவதும் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

### மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி - ந.தியாகராஜன் அறிக்கை!

திருச்சி, ஆக. 7-

திருச்சி மத்திய மாவட்ட திமுக செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று (07.08.2024ம் தேதி புதன்கிழமை) காலை 8.00 மணியளவில் கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகதுறை அமைச்சரும்மான அண்ணன் கே.என்.நேரு அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட திமுக சார்பில் கலைஞர் அறிவாலயத்தில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்டம் முழுவதிலும் உள்ள கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். அதே போல் அன்றைய தினம் நமது மத்திய, வடக்கு மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழகங்களின் சார்பில் கலைஞர் அவர்களின் உருவபடத்திற்கு மாலை அணிவித்து அன்னதானம் வழங்கி கலைஞர் நினைவு நாளை போற்றிடும் வகையில் நமது மாவட்டதில் சிறப்பாக கொண்டாட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம். இந்நிகழ்ச்சிகள் அனைத்திலும் மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் பொறுப்பளர்கள் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு மறைந்த நம் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் வணக்கம் செலுத்திட கேட்டுக்கொள்கிறோம்.




இவ்வாறு அவர்கள் அறிக்கை விடுத்துள்ளனர்.



பெரம்பலூர் மாவட்டம், குன்னம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முதன்மைக்கல்வி அலுவலர்(பொ) அண்ணாதுரை, வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் பிரபாசெல்லப்பிள்ளை, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் முத்தமிழ்ச்செல்வி மதியழகன், ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வி.வாசுதேவன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ரெ.சுரேஷ்குமார், ஆட்மா தலைவர்கள் வீ.ஜெகதீசன், சி.இராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை.பாஸகர், டாக்டர் அ.கருணாநிதி, ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் செல்வராணி, குன்னம் ஊராட்சி மன்றத்தலைவர் ம.தனலட்சுமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.